# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2007 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, இலங்கை–நிப்பன் கல்வி, பண்பாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2006, ஒற்றோபர் மாதம் 05 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2007 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, இலங்கை – நிப்பன் கல்வி, பண்பாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. ஓ. (கூட்) 05/2005

**இலங்கை – நிப்பன் கல்வி, பண்பாட்டு நிலையத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

முன்னுரை.

"இலங்கை – நிப்பன் கல்வி, பண்பாட்டு நிலையம்" என அழைக்கப் படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று அதன் உறுப்பினர் களால் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப் பட்ட கழகத்தோடு தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக் கத்துக்கென இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

சொல்லப்பட்ட கழகமானது, எந்தப் பல்வேறு குறிக்கோள்க ளுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றி கரமாக நிறைவேற்றிக் கொண்டுநடாத்தியுள்ளதுடன், கூட்டிணைப் பதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும், அத்தகைய விண்ணப் பத்தை அனுமதித்தல் பொதுமக்களுக்கு நன்மைபயக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, இலங்கை – நிப்பன் கல்வி, பண்பாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

இலங்கை – நிப்பன் கல்வி, பண்பாட்டு நிலையத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் "நிலையம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை – நிப்பன் கல்வி, பண்பாட்டு நிலையத்தில் தற்போது உறுப்பினர்களாகவுள்ளவர்களான அல்லது இத்தால் அமைக்கப் படும் கூட்டுத்தாபனத்தில் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த் துக் கொள்ளப்படுபவர்களான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இலங்கை – நிப்பன் கல்வி, பண்பாட்டு நிலையம்" என்னும் பெயரின் கீழும் மகுடத்தின்கீழும் இடையறா வழியுரிமை கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருத் தல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத்

தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) இலங்கை – யப்பானிய மக்களுக்கிடையில் கல்வி அத்துடன் பண்பாட்டு பிணைப்புகள், பரஸ்பர புரிந்துணர்வு ; அத்துடன் ஒத்துழைப்பு என்பவற்றை மேம்படுத்தல் ;

(ஆ) இலங்கையர்களும் யப்பானியர்களும் ஒருவர் மற்றவருடைய பண்பாடுகளையும், மொழிகளையும், வேறெவையேனும் மொழிகளையும் படிப்பதற்கு உதவிசெய்தல் அத்துடன் கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்குபடுத்துதல், அத்தகைய சுற்றுலாக்களில் பங்குபற்றுவோருக்கு விடுதி வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல் ; அத்துடன் கல்விசார் மற்றும் பண்பாட்டுப் பிரதிநிதிகளைக் கொடுத்து மாற்றம் செய்தல் ;

(இ) நூல் நிலையங்களைத் தாபித்தலும், பேணுதலும் ; அத்துடன் நூல்கள், புதினத்தாள்கள், பருவ வெளியீடுகள் அத்துடன் வேறு வெளியீடுகள் என்பவற்றைக் கொள்வனவு செய்தல், ஒப்பப்பணம் செலுத்துதல் ; அத்துடன் கூட்டுத்தாபனம் அதனது குறிக்கோள்களை மேம்படுத்தவும் முன்னேற்றவும் என விரும்பத்தக்கதென கருதக்கூடிய வேறு வெளியீடுகள் ;

(ஈ) திறமையுள்ள இலங்கை மாணவர்களுக்குப் புலமைப் பரிசில்களைத் தாபித்தலும், அவற்றையும் மானியக் கொடைகளையும் மற்றும் பரிசுகளையும் அளித்தல் ; அத்துடன் அவர்களின் ஆன்மீக, தத்துவ, பண்பாட்டு, விஞ்ஞான, தொழினுட்பக் கல்வியில் உதவிசெய்தல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்ட ஏனைய உள்ளூர் மற்றும்

வெளிநாட்டு கழகங்கள், சங்கங்கள் அல்லது ஒழுங்கமைப்புகளுடன் இணைந்து செயலாற்றுதல் ;

(ஊ) கல்வி சார்ந்த அல்லது பண்பாட்டு நோக்கங்களுக்காக யப்பானுக்குச் செல்லும் இலங்கையர்களுக்கு வழிகாட்டுவதற்கும் ஏனைய உதவிக்கும் ஏற்பாடு செய்தல் ; அத்துடன்

(எ) இலங்கை இளைஞர்களினதும் பிள்ளைகளினதும் கலைப்படைப்புக்களையும், விளையாட்டுக்கள், தொழினுட்ப அறிவு என்பவற்றில் திறமைகளையும் மேம்படுத்துதல், ஊக்குவித்தல் ; அத்துடன் அவற்றிற்கான வேலைகளையும், பாடசாலைகளையும், நிறுவனங்களையும் பேணுதலும் ;

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

4. (1) கூட்டுத்தாபனத்தின் நிருவாகம் மற்றும் முகாமை என்பன 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் வலுவிலிருக்கும் விதிகளுக்கு அமைவாக (இதனகத்துப் பின்னர் “சபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர், செயலாளர், பொருளாளர் என்போரையும், அத்தகைய விதிகளுக்கு இணங்கத் தேர்ந்தெடுக் கப்பட்டவர்களான பதினொரு உறுப்பினர்களுக்குக் குறையாதவர்களான வேறு உறுப்பினர்களையும் கொண்ட முகாமைச் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் முரணாக எது எவ்வாறிருப்பினும் வணக்கத்துக்குரிய உதாகம சுமங்கல தேரர் முதலாவது பணிப்பாளராதலும், அத்துடன் வணக்கத்துக்குரிய மீகஹத்தென்ன சந்திரசிறி தேரர் முதலாவது செயலாளர் நாயகமாதலும் வேண்டும். அவர்கள் தம் பதவியிலிருந்து முன்பாக விலகினாலொழிய இவர்கள் உயிருடன் இருக்கும் வரைக்கும் அல்லது அவர்கள் விரும்பும் வரைக்கும் பதவிவகித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச் சபை, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கும் நிலையத்தின் முகாமைச் சபையாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

**5**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கும் அமைவாக சபையானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையுதிர்ப்பு என்பன வாயிலாக அல்லது வேறு வகையாக அதற்கு உரித்தாக்கப்படக் கூடியதான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் கொள்ளுதல், வைத்திருத்தல் அத்துடன் அபிவிருத்தி செய்தல் ;

(ஆ) அத்தகைய ஆதனம் எதனையும் விற்றல், ஈடுவைத்தல், குத்தகைக்கு விடுதல், கொடுத்து மாற்றுதல் அல்லது வேறு வகையாகக் கையுதிர்த்தல் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு அவசியமாகக் கூடியவாறான அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல், தொழிலுக்கமர்த்துதல், ஊதியமளித்தல், அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் அத்துடன் அவர்களைப் பதவியகற்றுதல்;

(ஈ) உள்ளூரிலிருந்தாயினுஞ்சரி அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்தாயினுஞ்சரி காசாகவோ அல்லது பொருளாகவோ மானியக்கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெற்றுக் கொள்ளுதல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, ஏதேனும் வெளிநாட்டில் கூட்டுத்தாபனங்களைத் தாபித்தல் ;

(ஊ) வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், நடாத்துதல், முடிவுறுத்துதல் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தைப் பிணைப்பொறுப்பாகக் கொண்டு அல்லது அத்தகைய பிணைப்பொறுப்பின்றிய பணத்தைக் கடனெடுத்தல் அல்லது திரட்டுதல் ;

(எ) கூட்டுத்தாபனத்தைச் சார்ந்த பணங்களைச் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிணைப் பொறுப்புக்களில் முதலீடு செய்தல் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு இடைநேர் விளைவானவையான அல்லது உகந்தனவான அத்தகைய எல்லாச் செயல்களையும் அல்லது காரியங்களையும் செய்தல்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6.** (1) காலத்திற்குக்காலம் ஆண்டுப் பொதுக்கூட்டம் ஒன்றில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத எண்ணிக்கையினரின் வாக்குப்பெரும்பான்மைகொண்டு இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைப் பின்வரும் எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்றுக்காக ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :—

(அ) சபை உறுப்பினர்களைத் தெரிவுசெய்தல், அவர்களின் நியமனம் அல்லது பெயர்குறித்த நியமனம், அத்துடன் அவர்களின் தத்துவங்கள், கடமைகள் அத்துடன் அவர்களின் பதவிக்காலம் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் அத்துடன் சேவையாளர்கள் என்போரின் தத்துவங்கள், கடமைகள் அத்துடன் பணிகள் ;

(இ) சபையின் கூட்டங்களில் அவதானிக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறை, அவற்றைக் கூட்டுதல், கொண்டு நடாத்துதல், அத்தகைய கூட்டங்களின் நேரங்கள், இடங்கள், அறிவித்தல் அத்துடன் நிகழ்ச்சிகள், அதற்கான கூட்ட நடப்பெண் அத்துடன் அங்கு அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும், அதன் நிதிகளின் கட்டுப்பாடும் கணக்குகளைப் பேணுதலும், கணக்குகளின் கணக்காய்வும் ; அத்துடன்

(உ) பொதுவாக, கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமையும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் விதி எதுவும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படக்கூடிய அத்தகைய கூட்டத்திலும் அத்தகைய விதத்திலும் திருத்தப்படலாம், மாற்றப் படலாம், அதற்குச் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் இச்சட்டத் தின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோரா தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியைக் கொண்டி ருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக் கொடை யாவும் முகாமைச்சபை தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்கான எல்லாப் பணத் தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும், கணக்காய்வும்.

**8.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செல வினம், சொத்துக்களும் பொறுப்புகளும் அத்துடன் கூட்டுத்தாப னத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது –

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின், வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

கழகத்தினால் செலுத்தப்படற்பாலனவும் கழகத்துக்குச் செலுத்தப்படற்பாலனவுமான தனிசுகள்.

**9**. இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று நிலையத்துக்குள்ள எல்லா தனிசுகளும், பொறுப்புகளும், இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டும் ; அந்நாளன்று நிலையத்துக்கு வருமதியான எல்லாத் தனிசுகளும் கழகத்திற்குச் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்வாறு இடப்பட வேண்டுமென்பது.

**10**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினை கூட்டுத்தாபனத்தின் செயலாளர் நாயகத்தின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டுமென்பதுடன், அது செயலாளர் நாயகத்தினதும் கூட்டுத்தாபனத்தின் விதிகளில் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான அத்தனை எண்ணிக்கையினரான வேறு உறுப்பினர்களினதும் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான சாதனமெதிலும் இடப்படுதலாகாது; அத்துடன் அவர்கள் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கு அடையாளமாக சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும். அவ்வாறு கையொப்பமிடுதல் சாட்சியாக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதற்குப் புறம்பானதாகவிருத்தலும் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.*

**11.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், குடியரசினது உரிமைகளையேனும் ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அன்றிப் பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**12.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்பாடும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*